# மகிழ்ச்சி

MAGIZHCHI
MAGAZINE

NOVEMBER
2024

## பண்டிகையை
## ஆசரித்துச்
## சந்தோஷமாயிருப்பாயாக



**C.S.I. TAMIL CHURCH SHARJAH**
The United Arab Emirates,
Mob : 0507032150 / website : www.csitamilsharjah.com
For Private Circulation Only

# இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆயர் மடல் | 3 |
| செயலர் மடல் | 4 |
| திருமறை தியானம் | 6 |
| பெண்கள் பகுதி | 8 |
| அறிந்து கொள்வோம் | 10 |
| இனிய இல்லறம் | 11 |
| Church History | 14 |
| திருமறையை தெரிந்துகொள்வோம் | 17 |
| Kids Corner | 18 |
| Birthday & Wedding Anniversary Celebrants | 20 |
| Daily Bible Reading | 22 |
| ஆராதனை தியானப் பொருள் | 23 |

# From the Presbyter's Desk

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!

மீட்பரும் இரட்சகருமாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்கிறேன்.

பிதாவாகிய கடவுளாலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மை பாதுகாத்து, பராமரித்து நன்மையினால் திருப்தியாக்கி, வழிநடத்தி வந்துள்ளார் ஆண்டவருக்கு நாம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்துவோம். கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இந்த ஆண்டின் 11-வது மாதத்திற்குள் பிரவேசித்திருக்கின்றோம். அவரது அன்பிற்கு ஈடாக எண்ணத்தை செலுத்துவோம். தாவீது சொல்கிறார் "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காக எண்ணத்தைச் செலுத்துவேன்; இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு அவரை தொழுது கொள்வேன்" சங்கீதம் 116:12,13-ஆம் பிரயமானவர்களே, அதன் அடையளமாக வருகின்ற நவம்பர் 17 - ம் தேதி அறுப்பின் தோத்திரப் பண்டிகையை அனுசரிக்க இருக்கிறோம். கடவுளின் பெரிதான கிருபையை எண்ணிப் பார்த்தவர்களாய் நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து மகிழ்ச்சியோடு, குடும்பமாக, நண்பர்களாக ,உறவினர்களாக, ஒன்றிணைந்து இந்த பண்டிகையை நன்றியறிதலோடு அனுசரிக்க அழைக்கப்படுகிறோம். அன்று நடைபெற இருக்கின்ற ஆராதனை, ஆசனம் மற்றும் அனைத்து நிகழ்வுக்காக தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளும் படியாக உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அனைவரும் உற்சாகத்தோடு பண்டிகையில் கலந்துகொண்டு ஆண்டவருடைய நாமத்தை மகிமைப்படுத்தும் படியாக கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த ஆண்டின் கன்வென்ஷன் கூட்டங்கள் இம்மாதம் 29-தேதி முதல் 1- ம் தேதி வரை நமது ஆலய வளாகத்தில் வைத்து நடைபெறும். குடும்பமாக பங்கு பெற்று தெய்வ ஆசீர்வாதம் பெரும்படியாக உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த வருடம் REV. SAMUEL JOHN DHINAKARAN (C.S.I. COIMBATORE DIOCESE) அவர்கள் ஆண்டவருடைய வார்த்தையை நம் மத்தியிலே பகிர்ந்து கொள்வார்கள். அவருடைய ஊழியத்திற்காக அவருடைய பயணத்திற்காக ஜெபித்துக் கொள்ளும் படியாக உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இறை ஆசி உங்கள் அனைவரோடும் கூட தங்கி இருப்பதாக. ஆமென்.

இறைபணியில்
அருள்திரு. **J.ஜான் ஜெபலின் ஜோஸ்**

☎ **+971 50 703 2150**
**e-mail : tamilchurchcsisharjah@gmail.com**



# செயலர் மடல்

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே, திருச்சபையின் அங்கங்களாகிய உங்களனைவருக்கும் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை, ஆதலால், உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள். - சங்கீதம் 9:10

கடந்த பத்து மாதமும் நம்மை கைவிடாமல் எல்லா நிலையிலும் தமது செட்டையின் நிழலில் பாதுகாத்து வழிநடத்தின நம் தேவாதி தேவனுக்கு மகிமையை செலுத்திடுவோம்.

கடந்த மாதத்திலும் நமது திருச்சபையின் அங்கத்தினர் குடும்பங்களில் ஏற்பட்ட இழப்புகள் மத்தியிலும் தேவனுடைய கிருபை உடனிருந்து எல்லா ஆறுதலையும், தேறுதலையும், தெய்வீக சமாதானத்தையும் தந்ததற்காக தேவனை ஸ்தோத்தரிப்போம்,.

அக்டோபர் மாதம் இரண்டாம் வாரத்தில் நடைபெற்ற முதற்கனிப் படைப்பு ஆராதனையில் பங்கு பெற்று கர்த்தருக்கு நன்றி காணிக்கைகளைச் செலுத்தின அனைவரையும் திருச்சபையின் சார்பிலே வாழ்த்துகிறோம். தேவன் தாமே உற்சாகமாய், தங்களால் இயன்ற பங்களிப்பை, திருச்சபையின் ஊழியங்களுக்காய் வழங்கின குடும்பங்களை மென்மேலும் ஆசிர்வதிப்பாராக.

அதைப் போலவே ஒவ்வொரு வாராமும் அறுப்பின் தோத்திரப் பண்டிகையின் வாராந்திர காணிக்கைகளாகப் படைத்த பொருட்களுக்காக உங்கள்

அனைவருக்கும் அதனைப் பொறுப்பேற்று ஒருங்கிணைத்து செயல்பட்ட குழுக்களின் பொறுப்பாளர்கள் யாவருக்கும் நிர்வாகக்குழுவின் சார்பாக மீண்டும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடந்த மாதம் நம் மத்தியில் கடந்து வந்து இறை வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்ட இறைமக்கள் யாவருக்கும் நன்றிகளை கூறிக்கொள்கிறோம். நமது வாலிபர் ஞாயிறு அன்று ஆராதனையை சிறப்பித்த வாலிப பிள்ளைகள் மற்றும் அதன் பொறுப்பாளர்கள் Mr.Manoj Abraham and Mrs. Esther Manoj அனைவருக்கும் நிர்வாகக்குழு உறுப்பினர்களின் சார்பாக நன்றிகளையும் வாழ்த்துதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த மாதம் 17-ம் தேதி நடைபெற உள்ள ஸ்தோத்திரப் பண்டிகைக்கு பல்வேறு நிலைகளில் நாம் ஆயத்தமாகி வருகிறோம். வருகிற நவம்பர் மாதம் இரண்டாவது வார ஆராதனையிலே நாம் ஸ்தோத்திர பண்டிகைக்கு படைக்க உள்ள பொருட்களை திருச்சபையார் ஆராதனையிலே படைக்கும் படியாக அன்போடு கேட்டுக்கொள்கிறோம். நவம்பர் 17-ஆம் தேதி நடைபெற உள்ள ஸ்தோத்திரப் பண்டிகை ஆராதனைக்காகவும், தொடர் நிகழ்வுகளுக்காகவும் அதன் பொறுப்பாளர்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்கள் அனைவருக்காகவும் ஜெபித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

கர்த்தருக்குச் சித்தமானால் இந்த மாதம் (நவம்பர்) 29, 30, டிசம்பர் 1-ம் தேதிகளில் நமது திருச் சபையின் வருடாந்திர கன்வென்ஷன் கூட்டம் நடைபெறும் அதற்கான ஆயத்தப்பணிகள் மற்றும் நம்மோடு இறை வார்த்தைகளை பகிர்ந்து கொள்ள இருக்கிற தேவ ஊழியர் அவர்களுக்காகவும் அவருடையப் பிரயாணங்களுக்காகவும் ஜெபிக்க வேண்டிக்கொள்கிறோம்.

நாம் இந்த தேசத்தில் சமாதானமாக வாழவும் நம் கைகளின் பிரயாசங்கங்களை அனுபவிக்கவும் தந்த நம் தேவனை அனுதினமும் துதிப்பதோடு உலகெங்கிலும் தேசங்களின் மத்தியில் தேவ சமாதானம் நிலைப் பெற ஒருமனதோடு ஜெபிப்போம். கர்த்தர் தாமே நம் அனைவரையும், நம் தாயகத்தில் வாழும் குடும்பத்தின் மக்கள் அனைவரையும் பாதுகாத்து பராமரித்து வழி நடத்துவாராக ஆமென்.

திருச்சபை ஊழியத்தில்
**ஸ்டீபன் குணசேகர்**
☎ +971 58 5896 975

# பண்டிகையை ஆசரித்துச் சந்தோஷமாயிருப்பாயாக

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

மீட்பரும் இரட்சகருமாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரிலே அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

"உனக்கு உண்டான எல்லா வரத்திலும் உன் கைகளுடைய எல்லாக் கிரியையிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதித்தபடியினால், கர்த்தர் தெரிந்து கொள்ளும் ஸ்தானத்தில் உன் தேவனாகிய கர்த்தருக்கு ஏழு நாளளவும் பண்டிகையை ஆசரித்துச் சந்தோஷமாயிருப்பாயாக." (உபாகமம் 16:15)

பண்டிகைகள் இஸ்ரேல் மக்கள் சமூகத்தோடும் ஆன்மீகத்தோடும் மிகவும் தொடர்புடையவை ஆகும். பண்டிகை என்பதற்கு "Hag" என்கிற எபிரேய பதம் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு வீட்டில் குடும்பத்துடன் கொண்டாடுவது, அனைவரும் சேர்ந்து பொது இடங்களில் கொண்டாடுவது என்று அர்த்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. மோசே வழியாக பல பண்டிகைகளை தலைமுறைதோறும் கொண்டாட வேண்டும் என கடவுள் கட்டளை கொடுத்தார் உபாகமம் 16:16. இஸ்ரவேல் மக்கள் ஆண்டிற்கு இரு முறை கொண்டாடும் அறுப்புக்கால பண்டிகையை ஆசரித்து காணிக்கை செலுத்துவார்கள். நிலங்களில் கிடைக்கின்ற விளைச்சலை மையமாகக் கொண்டு கடவுளுக்கு நன்றி செலுத்தும் பண்டிகையாக ஆசரித்தனர். இதன் தொடர்ச்சியாகவே நம் திருச்சபைகளிலும் வருடத்திற்கு ஒருமுறை ஸ்தோத்திரப் பண்டிகையை ஆசரித்து கடவுளுக்கு நன்றி செலுத்தி காணிக்கை படைக்கிறோம். ஆண்டவர் ஈவாக தரும் அருட்கொடைகளை கொண்டாடும் பண்டிகையே இந்த அறுப்பின் ஸ்தோத்திர பண்டிகை. இப்பண்டிகை நாளில் நான் எவ்வளவு சம்பாதித்திருக்கிறேன் என் பிள்ளைகள் எப்படி இருக்கிறார்கள், என் சாமர்த்தியம் எவ்வளவு என்பதை மேம்படுத்துவதற்காக அல்ல. நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரை (சங்.136:23) துதிப்பதே பண்டிகை. நமது கடந்த நாட்களில் நாம் அடிமைப்பட்டிருந்ததையும் கடவுளது விடுதலையின் ஆற்றலையும் நினைக்க வேண்டும். அவரது வழி நடத்துதல் பராமரிப்பு (உபா.32:10) இவைகளை நினைப்பதே பண்டிகை. கடவுள் என்னை கண்டுபிடித்தார், குளிப்பாட்டினார் ,அழகு படுத்தினார். (எசே. 16:18).

நமது கடந்த கால கஷ்டங்கள், அடிமைத்தனம், நெருக்கங்கள் இவைகளை கண்டு மனதுருகி கடவுள் நமக்கு அருளிய கிருபையின் மகத்துவங்களுக்காக, இந்த ஆண்டு முழுவதும் அவரது கிருபை பொருந்திய இரக்கமான பாதுகாவலையும் நினைத்து கடவுள் சமூகத்தில் வருவது தான் பண்டிகை.

அதுமாத்திரமல்ல, பண்டிகையை சந்தோஷத்துடன் ஆசரிக்கும்படி ஆண்டவர் கட்டளையிடுகிறார். (உபா. 16:11,15) கடவுள் நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியுடனிருக்க விரும்புகிறார். அவருடைய சமூகத்தில் வரும்போது சந்தோஷமாய் வரவேண்டும் என்கிறார். சங்கீதக்காரன், மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து ஆனந்தத்தோடே அவர் சந்நிதி முன் வாருங்கள் (சங்.100:2) என அழைப்பு விடுக்கிறார். அநேக நேரங்களில் அநேகர் ஆலயத்திற்கு வந்தால் முகத்தை மாற்றிக் கொள்கிறார்கள். கனத்த முகத்தோடும், சோகத்தோடும் புன்னகையின்றி காண்பிப்பது தான் பக்தி என்று தவறாக எண்ணுகின்றனர் அது தவறு. கடவுள் தம் பிள்ளைகள் மகிழ்ச்சியாய், சந்தோஷமாய் தம்மை ஆராதிக்க வேண்டும். பண்டிகை கொண்டாட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்று நெகேமியா 8:10ல் வாசிக்கிறோம். இந்த மகிழ்ச்சி தனிப்பட்டவருக்கு மாத்திரமல்ல ,குடும்பத்தார், குடும்பத்தில் உள்ள வேலையாட்கள், திக்கற்றவர்கள், விதவைகள், ஊழியர்கள் யாவரும் சேர்ந்து ஆராதிப்பதால் கிடைக்கக்கூடிய மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். கஷ்டம், பாடுகள், கடின உழைப்புகள் மத்தியில் உன் கடவுளிடத்தில் மகிழ்ச்சியாய் வாழ உன் கஷ்டங்களையும் ஆண்டவருடைய பலிபீடத்தில் படைத்து அவைகளுக்காக மகிழ்ச்சியோடு நன்றி கூறுவதே பண்டிகை. கடவுளது கட்டளையுமதுவே. லேவியராகமம் 23:40ல் மகிழ்ச்சியான அலங்கார மரங்கள், குலைகள், விருச்சங்கள், கனிகள் மாத்திரமல்ல அரளிச்செடியும் கொண்டுவந்து படைத்து மகிழ்ச்சியாயிரு என்கிறார். அரளிச்செடி துக்கம், பிரிவு, கவலை காண்பிக்கின்ற ஒரு அடையாளம். நாமும் கடந்த கால வாழ்க்கையை நினைவு கூர்ந்து கடின வாழ்வின் மத்தியிலும் நன்மையை தந்த கடவுளை நினைவு கூர்ந்து பண்டிகையை கொண்டாட அழைக்கப்படுகின்றோம்.

கடவுள் நமக்குத் தந்த வாழ்வு, நம் வாழ்க்கைக்கு தேவையான ஆசீர்வாதங்கள் அனைத்திற்காகவும் நன்றி கூற வேண்டும். கடவுளின் கொடையை கடவுளின் அன்பை நினைவுகூர்ந்து வாழ்வோம் கடவுள் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

இறைப்பணியில்
உங்கள் ஆயர்.



# எயோதியாள் சிந்திகேயாள்

எயோதியாளும் சிந்தியோளும் பிலிப்பிப் பட்டண ஆற்றங்கரையில் லீதியாளோடும் மற்றம் வேறு சில பெண்களோடும் பவுலின் மூலம் நற்செய்தியைக் கேட்டு இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஏற்றுக் கொண்டவர்கள். பவுலோடு இணைந்து உடன் ஊழியராகவும் ஊழியம் செய்தார்கள். பிலிப்புப் பட்டண ஆற்றங்கரையில் இந்த பெண்களுக்கு தான் முதன் முதலில் பவுலின் மூலம் நற்செய்தியை கேட்கும் பாக்கியம் கிடைத்தது. இவர்கள் இருவரும் அன்று ஆண்டவரை ஏற்றுக்கொண்ட பின், இவர்கள் மற்ற பெண்களுக்கு நற்செய்தி சொல்வதில் ஆர்வம் காட்டினார்கள். மேலும் பிலிப்பிப் பட்டணத்தில் சபையின் உருவாக்குதலிலும், வளர்ச்சியிலும் உதவியாக இருந்தார்கள்.


ஆயினும் இவர்கள் இருவருக்கும் கருத்து வேறுபாடுகளும், வாக்குவாதமும், பிரிவினையும் ஏற்பட்டு பிலிப்பிப் பட்டண மக்களின் ஒற்றுமையை கெட்டுப்போயிற்று. அதனால் பவுல் அவர்களை கண்டித்தார். பிலி 4:2 செல்லுகிறபடி அவர்களை கர்த்தருக்குள் ஒரே சிந்தையாய் இருக்க அறிவுரையும் கூறினார். கிறிஸ்துவின் சிந்தைக்குத்

தடையாய் இருக்கும் வாக்கு வாதங்களை விட்டு விட்டு, சேர்ந்து வாழ ஆலோசனை கூறினார்.

பிலி 2:5 சொல்லுகிறபடி நம்முடைய வாழ்க்கையிலும் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை காணப்பட வேண்டும். கிறிஸ்துவின் சிந்தை நம்மை ஒருமனப்பாட்டு ஒற்றுமைக்குள் வழி நடத்தும். பிலி 2:2 பவுல் சொல்லியிருக்கிற படி கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒற்றுமையுடனும், அன்புடனும் கர்த்தருடைய மகிமைக்காக வாழ வேண்டும். பிலி 2:3 சொல்லியிருக்கிற படி கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரையும் நம்மை விட மேன்மையானவர்களாக கருதும் பண்பு நமக்கு தேவை. எல்லா நிலைகளிலும் தாழ்மையோடு இருக்க வேண்டும், யாரையும் குறைவாக எண்ணக்கூடாது.

பிலி 2:4 சொல்லுகிற படி தனக்கானவைகளை குறித்து கவனமாய் இருப்பது தேவைதான். ஆனாலும் பிறருக்கானவற்றை சிந்தித்து செயல்படுவது வேதம் நமக்கு கொடுக்கும் ஆலோசனை பிறர் நலனில் நாம் அக்கறை காட்டி வாழும் பொழுது ஒற்றுமையும்,அன்பும் வளரும் இதுதான் இயேசு கிறிஸ்துவின் சிந்தை. இப்படிப்பட்ட சிந்தை நம் ஒவ்வொருக்கும் தேவை.அதனால் நமக்குள் ஒருமனமும், ஐக்கியமும் ஏற்படும். ஜெபம், தாழ்மை, வேத வசனத்தின் ஆலோசனைகள் ஆகியவை நமக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகளைச் சரி செய்து பிலி 3:16 படி ஒரே சிந்தையாய் வாழ உதவி செய்யும். கர்த்தர் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக.

**J.ஜெனு ஜெபலின்**
ஆயர் அம்மா



# மிஷனெரி ராபட் மொபட்

## ஆப்ரிக்காவிற்கு சென்ற முன்னோடி மிஷனரி

தென் ஆப்பிரிக்காவில் “ஆப்பிரிக்கேனர்” என்ற கொடியவன் இருந்தான். அவன் தலையை வெட்டிக் கொண்டு வருபவர்களுக்கு 1000 டாலர் தருவதாக அரசாங்கம் அறிவித்தது. அவனைப் பார்ப்பதற்கே பலர் பயப்பட்டார்கள். 1816 ஆம் ஆண்டு இராபர்ட் மொஃபெட் என்ற மிஷனரி அவன் வாழ்ந்த கிராமத்துக்கே புறப்பட்டார். 86 நாட்கள் பயணத்திற்குப் பின் போய்ச் சேர்ந்தார். ஒரு சிறு குடிசையைக் கட்டி, அதிலே வாழ்ந்தார். ஒவ்வொரு நாளும் சிறு பிள்ளைகளை அழைத்து இயேசு கிறிஸ்துவைப் பற்றி போதித்தார். சொறியும் சிரங்குமாக இருந்த சிறு பிள்ளைகளை குளிப்பாட்டி அவர்களின் துணிகளை சுத்தம் செய்து கொடுத்தார். இப்படிப்பட்ட வாழ்க்கை முறை ஆப்ரிக்கேனர் என்ற கொடியவனை மாற்ற ஆரம்பித்தது. சிறிது சிறிதாக வேதாகமத்தை வாசிக்க ஆரம்பித்தான். அவனது இதயம் கழுவப்பட்டு இயேசுவிடம் மன்னிப்பை பெற்றான். அரசாங்கத்திடமிருந்தும் மன்னிப்பை பெற்றார். 54 வருடங்கள் ஆப்பிரிக்காவில் ஊழியம் செய்து ஏராளமான ஆப்பிரிக்க மக்களை இயேசுவிற்குள் வழி நடத்தினார் இராபர்ட் மொஃபெட்.



# வன்கொடுமைக்குள்ளாகும் குழந்தைகள்

**பிள்ளைகளின் மேன்மை அவர்கள் பிதாக்களே.**
(நீதிமொழிகள் 17:6)

சிறுகுழந்தைகள் காணாமல் போவதும் (Missing Child), வீட்டைவிட்டு ஓடிப்போவதும் (Running away from Home), தீய சகவாசத்தால் கெட்டுப் போவதும் (Spoilt Child), கொடியவர்களால் கெடுக்கப்படுவதும் (Abused Child) அன்றாடம் செய்தித் தாள்கள் தாங்கிவரும் செய்திகள்.

## உங்கள் குழந்தைகளை இவற்றிலிருந்து காப்பது எப்படி?

உங்கள் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய பலவிதமான கொடுமைகள் என்ன என்ன?

குழந்தைக் கொடுமை (Child Abuse) என்றவுடன், பெரியவர்கள் அல்லது அன்னியர்கள்தான் செய்வார்கள் என்று நினைக்கிறோம். அப்படியல்ல. உடன் படிக்கும் மாணவர்கள் அல்லது பெரிய மாணவர்கள், ஆசிரியர்கள், வீட்டிலுள்ள வேலைக்காரர்கள், விருந்தினர்கள், உறவினர்கள் போன்றவர்கள்கூட உங்கள் குழந்தைகளைக் கொடுமைப்படுத்தலாம்.

அப்படிக் கொடுமைக்குள்ளாகும் குழந்தைகளை எப்படி கண்டுபிடிப்பது?

திடீரென்று குழந்தைகளின் நடத்தையில் மாற்றங்கள் தெரியும்.

அவர்களிடை நடவடிக்கைகள் வித்தியாசமாக இருக்கும்.

சில குழந்தைகள் பயந்து நடுங்குவார்கள்.

சில குழந்தைகள் தனிமையை நாடுவார்கள்.

சிலர் பிறரிடம் பேசுவதை, முக்கியமாகப் பெற்றோர்களிடம் பேசுவதைத் தவிர்ப்பார்கள்; பேச்சில் தடுமாற்றமிருக்கும்.

சில குழந்தைகள் குறிப்பிட்ட வீட்டிற்கோ அல்லது இடத்திற்கோ (உதாரணம்: பள்ளிக்கூடம்) போவதற்கு மறுக்கும். தயங்கும்.

அநேகமாக இரண்டும் கெட்டான் வயதிலிருக்கும் குழந்தைகள் தான் பெரும்பாலும் பாதிப்பிற்குள்ளாகிறார்கள். அதாவது நான்கு வயதிலிருந்து, பதினான்கு வயதிற்குள் உள்ள பிள்ளகள்தான் பெரும்பாலும் இத்தகைய பாதிப்படைகிறார்கள். ஆண் குழந்தைகள், பெண் குழந்தைகள், இரு பாலருமே கொடுமைக்குள்ளாகிறார்கள். ஆனால் பெண் குழந்தைகளுக்கு இப்பாதிப்பு அதிகமாக இருக்கிறது.

## உடலை பாதிக்கும் கொடுமை (Physical abuse)

உயிர் சேதமின்றி ஏற்படும் உடற்சித்திரவதைகள் எதுவானாலும் அதை உடற் கொடுமை என்று கூறலாம். எடுத்துக்காட்டாக: அடித்தல், தலையில் குட்டுதல், கன்னத்தில் அறைதல், உதைத்தல், கிள்ளுதல், தீக்காயம் ஏற்படுத்துதல், தலைமயிரை இழுத்தல், கடித்தல், எறிதல், முரட்டுத்தனமாகத் தள்ளிவிடுதல். பிரம்பால் அடித்தல், வெயிலில் நிற்க வைத்தல், முட்டியிடச் செய்தல் அல்லது சரியான உணவு கொடுக்காமல் பட்டினி போடுதல் ஆகியவை உடலைப் பாதிக்கும் கொடுமைகளாகும்.

## உள்ளத்தைப் பாதிக்கும் கொடுமை (Emotional Abuse)

குழந்தைகளின் உள்ளத்தையும் (Mental health) வளர்ச்சி யையும் (social development) பாதிக்கும் சொற்களும் (கெட்ட வார்த்தைகள்). செயல்களும் (மனதைப் புண்படுத்தும் செயல்கள்) இதில் அடங்கும். வீட்டிலோ வெளியிலோ, பள்ளியிலோ குழந்தைகள் இவ்வகைப் பாதிப்பிற்குள்ளாகலாம். அன்னியர்களல்ல, பல பெற்றோர்கள்கூடத் தங்களையறியாமலே, தங்களுடைய பிள்ளைகளின் உள்ளங்களைப் பாதிப்பிற்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

## பாலியல் கொடுமை (Sexual abuse)

குழந்தைகளை எந்த வகையில் பாலியல் செயல்களில் ஈடுபடுத் தினாலும், உபயோகித்தாலும் அச்செயல் பாலியல் கொடுமையேயாகும். (Any sexual act between an adult and child. This includes fondling. penetration, intercourse, exploitation, pornography, exhibitionism, child prostitution,

group sex, oral sex, or forced observation of sexual acts.)

**பெற்றோர்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியவைகள்**

1. உங்கள் குழந்தைகள், அவர்கள்மேல் உங்களுக்குள்ள அன்பையும்,

அக்கறையையும் அறிந்திருக்க வேண்டும். You must let your children know that You Love them and You Care for them. @ தங்கள் பிள்ளைகளை உள்ளத்தில் உயிரினும் மேலாக நேசித்தும், அதனை வெளிக்காட்டாமல் உள்ளத்திலேயே புதைத்து வைத்துக் கொள்கின்றனர். அதனால் பல பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் பாசத்தை இறுதி வரை உணராதே போய்விடுகிறார்கள். பெற்றோர்களின். இந்த இரகசியப் பாசத்தை வெளியரங்கமாய் அறிந்திருந்தால், பல குடும்பங்களில் அரங்கேறும் அவல நிகழ்வுகள் தவிர்க்கப்பட்டிருக்கக் கூடும்.

2. எவ்வளவு சீக்கிரம் கற்றுத் தர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் குழந்தைக்கு அவர்களின் முழுப் பெயர், அப்பாஅம்மாவின் பெயர்கள், வீட்டு முகவரி, வீட்டுத் தொலைபேசிகைபேசி எண் ஆகியவற்றைக் கற்றுத் தர வேண்டும். பிள்ளைகள் பேசத் துவங்கும்பொழுதே இவற்றைக் கற்றுக் கொடுப்பது சிறந்தது.

அவ்வப்போது கேள்விகள் கேட்டு, இவைகளைச் சரியாகச் சொல்கிறார்களா என கவனியுங்கள்.

3. குழந்தைகள் எந்நேரமும் யாராவது ஒருவரின் கண் காணிப்பில் இருக்க. (Never leave children unattended) பெற்றோர்கள், ஆசிரியர்கள் அல்லது உங்களுக்கு அறிமுகமானவர்கள் யாராவது ஒருவரின் கண்காணிப்பில் குழந்தைகள் இருத்தல் நலம்.

4. கடைவீதிக்குப் பிள்ளைகளுடன் செல்லும்போது மிகவும் கவனம் தேவை. பிள்ளைகள் உங்களைவிட்டுப் பிரிந்து போய் அவர்கள் உங்களைத் தேடும் நிலையை உருவாக்காதீர்கள். ஒருவேளை பிள்ளைகள் உங்களைத் தவற விட்டுவிட்டால், அவர்களைக் கண்டுபிடிக்க வசதியாக நீங்கள் எந்தக் கடையில் சாமான் வாங்கினீர்களோ அங்கேயே நிற்க வேண்டுமென்று. Departmental Store ஆக இருந்தால் அங்குள்ள கடை ஊழியர்களிடம்தான் பெற்றோரைவிட்டுப் பிரிந்துவிட்டதைக் கூற வேண்டு மென்பதைக் கற்பித்து வையுங்கள்.

# சிறப்புமிக்க (S.P.C.K.) மிஷனெரி சுவார்ட்ஸ்




## "உன் தந்தையின் வீட்டை மறந்துவிடு"

C.F.சுவார்ட்ஸ் 1726-ஆம் ஆண்டு ஜெர்மனியில் பிறந்தார். இவருடைய தாய் கடவுள் பக்தி மிகுந்தவர். சிறு பிள்ளையாக இருக்கும்போதே இவரைக் கடவுள் ஊழியத்திற்கென அர்ப்பணம் செய்தார். இவருடைய தகப்பனார் சுவையான ரொட்டிகள் செய்வதில் கைதேர்ந்தவர். இவருடைய குறைந்த வருவாயில் மகனைப் பள்ளியிலும், கல்லூரியிலும் சேர்த்துப் படிக்கவைக்க இயலவில்லை. போட்டிகளில் கலந்துகொண்டு படிப்பதற்குத் தேவையான உதவித்தொகையைப் பரிசாகப் பெற்றார். ஹல்லே பல்கலைக் கழக மாணவராக இருந்துகொண்டே, ஒரு பள்ளியில் ஆசிரியர் வேலை செய்து தம் கைச்செலவுக்குத் தேவையான பணத்தைச் சம்பாதித்துக் கொண்டார். இவ்வாறு இளம் பருவத்திலிருந்தே எளிமையாக வாழக் கற்றுக் கொண்டார்.

அப்பொழுது சுல்ட்ஸ், ஹல்லே பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றி வந்தார். திருமறையைத் தமிழில் புதுப்பித்து வெளியிடத் திட்டமிட்டார். அச்சடிப்பதில் தமக்கு உதவியாய் இருப்பதற்காக, சுவார்ட்சைத் தமிழ் கற்றுக்கொள்ளுமாறு ஊக்குவித்தார். சுவார்ட்சும் அதற்கிசைந்தார். எனவே இந்தியாவிற்குச் செல்லுமாறு டேனிஷ் மிஷன் இவருக்கு அழைப்புவிடுத்தபோது இவரது குடும்பத்தாரும், இவரும் அது கடவுளின் அழைப்பே என்று உணர்ந்தனர். இவரை வழியனுப்பியபோது, "உன் தந்தையின் வீட்டை மறந்து விடு" என்று தகப்பனார் சொளினார். தமது குடும்பத்தை இவர் மறந்துவிடவில்லையாயினும் இவர் தாயகம் திரும்பவே இல்லை. இந்தியாவிலேயே 48 ஆண்டுகள் தங்கித் தொடர்ந்து பணியாற்றினார்.

## உயரிய பண்பாளர்

1750-ல் சுவார்ட்ஸ் தரங்கம்பாடிக்கு வந்தார். இதர அருட்பணியாளர்களுடன் சேர்ந்து 12 ஆண்டுகள் ஊழியம் செய்தார். பிரசங்கம் செய்தல்,பள்ளிப் பாடம் கற்பித்தல், நற்செய்தி அறிவித்தல், திருமுழுக்குப் பெறுவோரை ஆயத்தம் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டார். தரங்கம்பாடியிலும், கிராமங்களிலும் தமது நேரத்தைச் செலவிட்டார். சில வேளைகளில் தொலை தூரம் சென்று நற்செய்தியை



அறிவித்தார். ஆங்காங்கே சிறு குழுக்களாக வந்த கிறிஸ்தவர்களையும் சந்தித்தார்.

தித்தவர்களெல்லாம் இப்பண்பாளரைப் பாராட்டினர். எளிதில் அனைவருடனும் பழகக்கூடியவர்; மகிழ்ச்சி நிறைந்தவர்; தாழ்மையைத் தரித்துக்கொண்டவர்: சுயநலமில்லாதவர்; நேர்மையானவர்; எளிமையாய் வாழ்ந்து தமது ஊதியத்தின் பெரும் பகுதியை ஊழியத்திற்கென்றும், ஏழைகளுக்கு உதவி செய்திடவும், பெரிய ஆலயங்களைக் கட்டவும் கிராமங்களில் சிற்றாலயங்கள் கட்டவும் கொடுத்து உதவி செய்தவர். இவர் இறந்தபோது தமது சொத்துக்களில் பெரும்பகுதியைத் தஞ்சாவூர் திருச்சபைக்கு உரிமையாக்கியிருந்தார் என்பது தெரிய வந்தது.

மற்ற மிஷனெரிமார் எவரும் செய்யாத பல்வேறு சிறப்புப் பணிகளையும் செய்திருந்தார். இப்பொறுப்புகளை இவருடைய சிறந்த பண்பைக் கருதியே இவரிடம் ஒப்படைத்தனர். பலவிதமான பணிகளில் ஈடுபட்டிருந்தபோதிலும், பிற சமயத்தவருக்கு நற்செய்தி அறிவிக்க அழைக்கப்பட்டவர் என்பதை ஒருகணமும் மறக்கவில்லை.

### ஆங்கிலேய போர்வீரர்களின் ஆயர்

தஞ்சாவூர் இராஜாவின் இராணுவத்தில் கிறிஸ்தவ சிப்பாய்கள் சிலர் இருந்தனர். 1762-ல் தஞ்சாவூர் சென்றபோது, சுவார்ட்ஸ் அவர்களைச் சந்தித்து அவர்களுக்குத் திருவிருந்து ஆராதனை நடத்தினார். அங்கிருந்து திருச்சிராப்பள்ளிக்குச் சென்றார். அங்கே இருந்த கோட்டையில் ஓர் ஆங்கிலேய காவற்படையிருந்தது. ஆனால் ஆயர் இல்லை. திருச்சியில் தங்கிப் படைவீரர்களுக்கு ஆங்கிலத்தில் வழிபாடு நடத்திக் கொடுக்குமாறு படைத்தலைவர், சுவார்ட்சை வேண்டிக்கொண்டார். நற்செய்திப் பணி செய்வதற்குச் சிறந்த இடமாகத் தோன்றியதால், திருச்சியில் தங்குவதற்கும் இசைந்தார். சிறிது காலம் தங்கிட எண்ணினாலும், 15 ஆண்டுகளாக அங்கேயே தங்கி ஊழியம் செய்தார்!

திருச்சியில் அவர் தங்கியிருந்த முதல் இரண்டாண்டுகளில் ஆங்கிலேயப் போர்வீரர்கள் பலர் கொல்லப்பட்டனர். அங்கிருந்த வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட பெரும் விபத்தில் சிலர் உயிரிழந்தனர். போரில் காயமடைந்து சாகும் நிலையிலிருந்தவர்களையும் உடல்நலம்

குன்றியவர்களையும் குணப்படுத்த அவர் படைவீரருடன் மதுரைக்குச் சென்றார். மீண்டும் திருச்சிக்கு வந்தார். மேற்குறிப்பிட்ட சம்பவங்களில் உயிரிழந்த போர்வீரர்களின் பிள்ளைகளுக்கெனப் பள்ளிக்கூடம் ஒன்றைத் தொடங்கினார்.

## திருச்சியில் S.P.C.K மிஷனெரி

1767-ல் தமது பணியை S.P.C.K திருச்சி வரை விரிவடையச் செய்யத் தீர்மானித்தது. அங்கு அருட்பணிக்குப் பொறுப்பேற்க சுவார்ட்ஸ் கேட்டுக்கொள்ளப்பட்டார். எனவே டேனிஷ் மிஷன் இசைவையும் பெற்று அப்பொறுப்பை ஏற்றார். ஓராண்டுக் காலத்திற்குள் திருச்சியில் இருந்த கோட்டைக் காவல் படைக்கு ஆயராகவும், கிழக்கிந்தியக் கம்பெனி ஆளுநர் இவரை நியமித்தார். இவ்வாறு இரண்டு பொறுப்புக்களையும் இவரே ஏற்க வேண்டியதாயிற்று.

நமது நேரத்தின் பெரும் பகுதியைப் படை வீரர்களோடு கழித்த போதிலும் சமயம் வாய்த்தபோதெல்லாம் நகரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களுக்குச் செல்லுவார். கிராமச் சபை ஊழியர்கள் சிலர் இவருக்கு உதவியாய் இருந்தனர். இரண்டிரண்டு பேராக இவர்களைத் தொலைவிலுள்ள ஊர்களுக்கு அனுப்பிவைத்தார். ஒவ்வொரு நாளும் காலை ஜெபிக்கவும் தியானம் செய்யவும் அனைவரும் ஒன்று கூடுவர். பின் அன்றைய வேலை முடிந்தபின் மாலை வீடு திரும்புவர். தாங்கள் பெற்ற அனுபவங்களைச் சுவார்ட்சுடனும், மற்றவர்களுடனும் பகிர்ந்துகொள்வர். திருமறை வாசித்து, ஜெபித்து நாள்தோறும் பணிகளை முடிப்பர்.

மிகுதியான பணிகளுக்கிடையிலும் அரபு, பாரசீக மொழிகளைக் கற்றுக்கொள்ள சுவார்ட்ஸ் நேரம் ஒதுக்கினார். அவ்வப்போது திருச்சியில் தங்கிய ஆற்காட்டு நவாப்புடன் உரையாடுவதற்கு இது உதவியாயிருந்தது.

திருச்சியில் தங்கியிருந்த சுவார்ட்ஸ், சிலமுறை தஞ்சாவூர் சென்று வந்தார். தஞ்சாவூரை ஆண்ட துல்ஜாஜி அரசரையும், அவருடைய அலுவலர்களையும் சந்தித்தார். தஞ்சாவூர் அரசரின் நண்பரானார். தஞ் சாவூரை மையமாகக்கொண்டு நற்செய்திப் பணி செய்ய விரும்பினார். ஆனால் அரசாங்க அலுவலர்களால் இவர் தாக்கப்பட்டபோது, நற்செய்திப் பணிக்கு இன்னும் காலம் கனிந்து என்று உணர்ந்தார். பத்துக் கிலோ மீட்டர் தொலைவில் வல்லம் என்ற கிராமம் இருந்தது. அங்கே கோட்டைக் காவல் படையும், முகாமும் இருந்தன. அவ்விடத்தை மையமாகக்கொண்டு நற்செய்திப் பணியைத் தொடங்கினார்.

# திருமறையை தெரிந்துகொள்வோம்

சங்கீதம் 51 - 60

1. முன்பாக நிற்கிறது என்ன?
2. தாவீது எப்பொழுது தன் நாவு தேவனுடைய நீதியைக் கெம்பீரமாய்ப் பாடும் என்று சொல்லுகிறார்?
3. சங்கரிக்கும் சகல வார்த்தைகளையும் விரும்புவது யார்?
4. எப்பொழுது யாக்கோபுக்குக் களிப்பும் இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியும் உண்டாகிறது?
5. தேவன் பரலோகத்திலிருந்து யாரை கண்ணோக்கினார்.
6. தேவன் எனக்கு.
7. நீதிமானை ஒருபோதும்?
8. ஆயுளின் நாட்களில் பாதி வரையிலாகிலும் பிழைத்திருக்கமாட்டார்கள் யார்?
9. தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் எங்கே வாசிக்கிறோம்?
10. உமதுவானபரியந்தமும், உமது மேகமண்டலங்கள் பரியந்தமும் எட்டுகிறது?
11. சர்ப்பத்தின் விஷத்திற்கு ஒப்பான விஷம் யாரிடம் இருக்கிறது?
12. தேவன் எப்படிப்பட்ட தேவனுமாயிருக்கிறார்?
13. புறஜாதிகள் யாவரையும்?
14. தலையின் பெலன்?
15. "இருதயமோ யுத்தம்" எங்கே வாசிக்கிறோம்?

கடந்த அக்டோபர் மாதம் கேள்விகளுக்கு பதிலளித்த அனைவருக்கும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துகொள்கிறோம்.

1. Mrs.Stella Jashwanth
2. Mrs.Thangamani Anbalagan
3. Mrs.Rubavathi
4. Mrs.Kavitha Johnson
5. Mrs.Selina Stephen
6. Mrs.Ruby Jeyaseelan
7. Mrs.Benisha Christobel
8. Mrs.Merlin Jebahar
9. Mrs.Jone Bino
10. Mrs.Baby Jesudass
11. Mrs.Syilva Sekar
12. Mrs.Sheela Hendry

**Children's Corner Colouring**

1. S.San Hedrin

# Joseph in Egypt

## Key Theme

Youth in search of a meaningful life.

## Key Passages

Genesis 37-41

## READ the Word

### Youth in Search of a Meaningful Life

Joseph was only a teenager when his brothers sold him off as a slave. He went through so many ups and downs and ups and downs and ups and downs! But through it all, Joseph always sought to live a meaningful life that would be pleasing to God. He always tried to follow God, no matter how hard it was.

God had a very important purpose for Joseph's life. Read Genesis 37-41 to find out how God used Joseph to save Joseph's family, and people from all over the world, from starving in a terrible famine.

### Hidden Message

Even in very difficult situations Joseph relied on God. Color the shapes with dots, red, and the shapes without dots, blue, to find the hidden message.





ANSWER: Trust and obey.

## Learn the Word

Choose the correct word from the bracket and fill in the blanks. Then, memorize the verse!

Use 1 Timothy 4:12 for help.


Don't let ____________ look ____________ on you because
(anyone, some people) (up, down)

you are ____________, but set an example for the believers in
(young, old)

speech, in conduct, in ____________, in faith and in purity.
(hate, love)

## COLOR This

Grab your art supplies and color this picture of Joseph's journey from prison to palace.




Don't forget to send your answers to Pastor Uncle by the 15th of this month.

+971 50 703 2150

# Birthday & Wedding day Celebrants

**1st Nov**
MASTER MASTER. CYRIL HARRIS SATHIYA
MASTER MASTER. A. JOSEPH ILAMARAN
**2nd Nov**
MRS MRS. RUBY JOHN MARKCUS
**3rd Nov**
MRS SYLVIA SEKAR
MRS LAVEENA HILMA JOYCE
**4th Nov**
MR KOIL PITCHAI SAMUEL C.
**5th Nov**
MISS EVANIYA SHERIN
**6th Nov**
MISS RACHEAL BENINA P.
MRS PREETHI
MR WILLIAMS PRABHAKARAN
**7th Nov**
MISS HEPZIBAH GNANA DEBAM K.
MRS MARYJAH BEAULH D
MR THANGA BABU
MR JOHN RABINDRANATH PAULRAJ
**10th Nov**
MRS CATHERIN
**12th Nov**
MR STALIN JOSE. Y
**13th Nov**
MRS BENISHA CHRISTABEL
MR SANTHA KUMAR SELVARAJ
**14th Nov**
MASTER ABISHEK JESHURUN BROWN
MRS NAJIMA VIJI K.
MISS ACHSAH DAVINA
**15th Nov**
MRS JANI VICTORIA
MASTER VASANTH VIJAYANAND
MISS JENIFER KEREN
MISS JEROLIN AGNES
**17th Nov**
MISS NEOLA CHRISTINE AUGUSTINE
**18th Nov**
MISS JENNIFAR ELCY K.
MASTER JERVISH CLAUDIAN
**19th Nov**
MR EBENEZER JACOB V.
MASTER JEREMIAH BENHAIL SAMUEL
**21st Nov**
MR DANIEL FRANK RAJKUMAR.T
MR JOSH ASHWINE
**22nd Nov**
MASTER SHANE DANIEL
**23rd Nov**
MISS DAFINA DINESH
**27th Nov**
MR THOMAS PAUL RAJ.P
**28th Nov**
MRS KAVITHA S.

## Wedding Anniversary

**5th Nov**
MR. PHILIP MOSES & MRS. DIVYA ANGELINE

**8th Nov**
MR. NELSON RAO J.

**9th Nov**
MR. SARAVANA KUMAR & MRS. VEERANI
MR. JESUDASAN RAJIAH & MRS. RITA JABA VASITAI

**10th Nov**
MR. NIRMAL RAJKUMAR & MRS. ANU BEULAH BERNICE.D

**12th Nov**
MR. S.JOHNSON & MRS. KAVITHA

**15th Nov**
MR. LAVIN RAJ & MRS. VANITHA

**16th Nov**
MR. J. JOHIN IMMANUEL & MRS. K. HELINATH PAULINE

**18th Nov**
MR. SUJIN D. & MRS. PRIYA CHRISTOBEL SUJIN

**19th Nov**
MR. SUNILKUMAR K. & MRS. VIJILA S.

**22th Nov**
MR. FELIX RAJA SINGH & MRS. S.BABY

**23th Nov**
MR. SURESH JAYAKUMAR D. & MRS. JULIE SURESH S.

## DAILY BIBLE READING NOVEMBER 2024

| Day | Morning | Evening |
|---|---|---|
| 01 FRI | லேவியராகமம் /LEVITICUS 10:1-20 | லேவியராகமம் /LEVITICUS 11:1-47 |
| 02 SAT | லேவியராகமம் /LEVITICUS 12:1-8 | லேவியராகமம் /LEVITICUS 13:1-37 |
| 03 SUN | சங்கீதம் /PSALMS 120 | சங்கீதம் /PSALMS 121 |
| 04 MON | லேவியராகமம் /LEVITICUS 13:38-59 | லேவியராகமம் /LEVITICUS 14:1-32 |
| 05 TUE | லேவியராகமம் /LEVITICUS 14:33-57 | லேவியராகமம் /LEVITICUS 15:1-33 |
| 06 WED | லேவியராகமம் /LEVITICUS 16:1-34 | லேவியராகமம் /LEVITICUS 17:1-16 |
| 07 THUR | லேவியராகமம் /LEVITICUS 18:1-30 | லேவியராகமம் /LEVITICUS 19:1-37 |
| 08 FRI | லேவியராகமம் /LEVITICUS 20:1-27 | லேவியராகமம் /LEVITICUS 21:1-24 |
| 09 SAT | லேவியராகமம் LEVITICUS 22:1-33 | லேவியராகமம் /LEVITICUS 23:1-44 |
| 10 SUN | சங்கீதம் /PSALMS 122 | சங்கீதம் /PSALMS 123 |
| 11 MON | லேவியராகமம் /LEVITICUS 24:1-23 | லேவியராகமம் /LEVITICUS 25:1-34 |
| 12 TUE | லேவியராகமம் /LEVITICUS 25:35-55 | லேவியராகமம் /LEVITICUS 26:1-26 |
| 13 WED | லேவியராகமம் /LEVITICUS 26:27-46 | லேவியராகமம் /LEVITICUS 27:1-34 |
| 14 THUR | எண்ணாகமம் /NUMBERS 1: 1-54 | எண்ணாகமம் /NUMBERS 2:1-34 |
| 15 FRI | எண்ணாகமம் /NUMBERS 3:1-26 | எண்ணாகமம் /NUMBERS 3:27-51 |
| 16 SAT | எண்ணாகமம் /NUMBERS 4:1-28 | எண்ணாகமம் /NUMBERS 4:29-49 |
| 17 SUN | சங்கீதம் /PSALMS 124 | சங்கீதம் /PSALMS 125 |
| 18 MON | எண்ணாகமம் /NUMBERS 5:1-31 | எண்ணாகமம் /NUMBERS 6:1-27 |
| 19 TUE | எண்ணாகமம் /NUMBERS 7:1-23 | எண்ணாகமம் /NUMBERS 7:24-53 |
| 20 WED | எண்ணாகமம் /NUMBERS 7:54-89 | எண்ணாகமம் /NUMBERS 8:1-26 |
| 21 THUR | எண்ணாகமம் /NUMBERS 9:1-23 | எண்ணாகமம் /NUMBERS 10:1-36 |
| 22 FRI | எண்ணாகமம் /NUMBERS 11:1-35 | எண்ணாகமம் /NUMBERS 12:1-16 |
| 23 SAT | எண்ணாகமம் /NUMBERS 13;1-33 | எண்ணாகமம் /NUMBERS 14:1-25 |
| 24 SUN | சங்கீதம் /PSALMS 126 | சங்கீதம் /PSALMS 127 |
| 25 MON | எண்ணாகமம் /NUMBERS 14:26-45 | எண்ணாகமம் /NUMBERS 15:1-41 |
| 26 TUE | எண்ணாகமம் /NUMBERS 16:1-24 | எண்ணாகமம் /NUMBERS 16:25-50 |
| 27 WED | எண்ணாகமம் /NUMBERS 17:1-13 | எண்ணாகமம் /NUMBERS 18:1-32 |
| 28 THUR | எண்ணாகமம் /NUMBERS 19:1-22 | எண்ணாகமம் /NUMBERS 20:1-29 |
| 29 FRI | எண்ணாகமம் /NUMBERS 21:1-35 | எண்ணாகமம் /NUMBERS 22:1-41 |
| 30 SAT | எண்ணாகமம் /NUMBERS 23:1-30 | எண்ணாகமம் /NUMBERS 24:1-25 |

# ஆராதனை தியானப் பொருள்

## நவம்பர் - 2024

| நாள் | திருமறைபாடம் | | தியானப்பொருள் |
|---|---|---|---|
| ஞாயிறு<br>Nov-3<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | சகரியா 4:11-4<br>1 கொரிந்தியர் 3:10-15<br>மத்தேயு 5:14-16<br>சங்கீதம் 27 | விளக்குத் தண்டுகளின் மீதுள்ள விளக்கு<br>LIGHT ON THE LAMP STANDS |
| ஞாயிறு<br>Nov-10<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | யாத்திராகமம் 25:1-22<br>2 கொரிந்தியர் 9:1-15<br>யோவான் 1:1-12<br>சங்கீதம் 122 | தோத்திரப் பண்டிகை ஆயத்தம்<br>PREPARATION FOR THANKS GIVING FESTIVAL |
| ஞாயிறு<br>Nov-17<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | 1 நாளாகமம் 29:10-20<br>1 தீமோத்தேயு 6:6-12<br>லூக்கா 21: 1-4<br>சங்கீதம் 65 | தோத்திரப் பண்டிகை<br>HARVEST FESTIVAL |
| ஞாயிறு<br>Nov-24<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | யாத்திராகமம் 2:1-10<br>3 யோவான் 1-15<br>லூக்கா 18:15-17<br>சங்கீதம் 47 | திருச்சபையில் குழந்தைகள்<br>CHILDREN IN THE CHURCH |